[1973 பிப்ரவரி 26

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள இடங்களில் ஒருவரை நியமிக்கலாம். பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு வசதியுள்ள இடங்களில் இரண்டு பேர்களை நியமிக்க லாம். அதுவும் ஊரக வளர்ச்சி இயக்குநருடைய அனுமதி பெற்று நியமிக்க வேண்டும். அனுமதி பெருமல் இரண்டு பேர்களை நியமித்து விட்டார்கள். ஒருவர் இருக்கிருர். மற்றவருக்குத் தேவை இருக்குமானல், அதற்கேற்ற அளவு நிதி வசதி பெருகியிருக்குமானல் மற்றெருவரை நியமிக்கலாம் என்று ஆணை இடப்பட்டிருக்கிறது.

சுரு மீன் எண்ணெய் தயாரிப்பு நிலையம்.

*164 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

வங்காள விரிகுடாக் கடலில் வாழும் நெடிய சுருமீன்களைப் பிடித்து, “ஷார்க் லிவர் ஆயில்” தயாரிக்கும் பெரிய தொழிற்சாலை ஒன்றை விரை வில் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கடல் செல்வமான சுரு மீன்கள் ஏராளமாக இருப்பது கடலில் குளிக்கச் செல்கிறவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அறிவிப்புகள் மூலமாகத் தெரிய வருகிறது. ஆகவே, மத்திய அரசு தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று நாமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறபடி, கடல் வளம் முழுதும் பயன்படுத்தும் வகையில் ஷார்க் லிவர் ஆயில் தயாரிக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் இந்த ஆண்டேனும் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுதே தஞ்சை மாவட்டத்தில் நான்கு நிலையங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு நிலையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நிலையங்களும் இந்த சுரு மீன் எண்ணெய் தயாரிக்கும் நிலையங்கள் இருக்கின்றன. ஆனாலும், 50,000 கிலோகிராம் எண்ணெய் கிடைக்கும் வகையில் நிலைமை இருந்தால் அந்தத் தொழிற்சாலையை நாம் நடத்த முடியும். இந்த ஏழு நிலையங்களிலும் உற்பத்தியாவது தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் தான். அந்த எண்ணெயைக் கேரளாவிற்கு அனுப்பி விடுகிறோம். கேரளாவில் ஒரு சோப் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசாங்கமே நடத்துகிறது. அவர்கள் செய்வதைப் போல் நாமும் இங்கே செய்ய வேண்டும் என்ருல் குறைந்த பட்சம் 50,000 கிலோகிராம் எண்ணெய் எடுக்க வேண்டிய அளவுக்கு சுரு மீன்கள் கிடைக்கவேண்டும் பெரிய சுரு மீன்கள் நமக்குக் கிடைக்கின்றன என்ருலும், அவற்றைச் சங்கிலி போட்டுப் பிடிக்க வேண்டும் என்று கூறுகிருர்கள். சங்கிலி போட்டுப் பிடிக்கக்கூடிய அளவுக்கு நாம் செய்தால் அந்த அளவுக்கு லாபம் கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கிடைக்கின்ற சுரு மீன்களைப் பிடித்து, தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயை மாத்திரம் தற்சமயம் கேரளாவிற்கு அனுப்பிவைக்கிறோம்.

1973 பிப்ரவரி 26]

திரு. ஜி. ஆர். எட்மண்ட் : குறைந்த பட்சம் 50,000 கிலோகிராம் மீன் கிடைத்தால் தான் இவைகளையெல்லாம் நடத்த முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூடுதலான சுறா மீன்கள் பிடிக்க, கடலில் ஏதாவது சர்வே நடக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது 50,000 கிலோ கிராம் கிடைக்கவேண்டியிருக்க, 14,000 கிலோகிராம் சுறா மீன்தான் கிடைக்கின்றன. அதிகமாக சுறா மீன்கள் பிடிக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. பெரிய சுறா மீன்கள் குறைந்த அளவில் கிடைக்கின்றன. அவைகளைச் சங்கிலி போட்டுப் பிடிக்க அதிகப் பணச் செலவு ஏற்படுகிறது. அவ்வளவு பணத்தைச் செலவழித்து லாபகரமாக எண்ணெய் தயாரிக்க முடியுமா என்றால், முடியாது. ஆகவே. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்த பிறகு தான் அத்தகைய முறையை அரசாங்கம் கைவிட்டிருக்கிறது.

அரிசனக் குடியிருப்பு மனைக்கென கையகப்படுத்தப்பட்ட நிலம்.

*165 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1971–72-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக வீட்டு மனைகளை கையகப்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) 1971–72-ம் நிதி ஆண்டிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிசனங்களுக்காக வீட்டு மனைகளைக் கையகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,50,000·00.

(இ) ரூ. 1,56,308·16.

(உ) இம் மாவட்டத்தில் 29 கிராமங்களில் 42·00 எக்கரா நிலம் கையகப்படுத்தப்பட்டு 512 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

இசையனூரில் சர்வோதய சங்கத்திற்கு நிலம் வழங்கல்.

*166 வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆற்காடு ஒன்றியத்தில் உள்ள இசையனூர் என்ற ஊரில் உள்ள சர்வோதய சங்கத்திற்கு அரசு புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கொடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ?